**சுருக்கம்**

கலையும் பண்பாடும் – கலை பண்பாட்டு இயக்கக வளாகத்தில் உள்ள தாகூர் கலையரங்கத்தினை பொது மக்கள் கலந்து கொள்ளும் புத்தக வெளியீடு கலை இலக்கிய நிகழ்ச்சிகள் கலை கண்காட்சி போன்ற நிகழ்ச்சிகளை நடத்த கலைப் பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பண் 1–1)த் துறை**

அரசாணை (நிலை) எண்.161 நாள்:10.09.2008

திருவள்ளுவர் ஆண்டு – 2039, ஆவணி – 25

**ஆணை:**

கலைப் பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தாகூர் கலையரங்கத்தினை பொதுமக்கள் கலந்துகொள்ளும் எளிய நிகழ்ச்சிகளான புத்தக வெளியீட்டு விழாக்கள் கலை இலக்கிய நிகழ்ச்சிகள், கலைக் கண்காட்சிகள் மற்றும் இதர விழாக்கள் ஆகியவற்றிற்கு வாடகைக்கு விடவும், இதற்கு நாள் ஒன்றிற்கு ரூ.1000/– வாடகையாகவும், பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு உரிய கட்டணத்தையும் பெற்றுக் கொண்டு இவ்வாறு பெறப்படும் கட்டணங்களை அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் கலைப் பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. இதற்கான தக்க விளம்பரத்தை வெளியிடுமாறு கலைப் பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2) இவ்வரசாணை நிதி துறையின் அ.சா.கு.எண்.380/SS (PK)/08 நாள்:18.08.2008–ல் பெற்று இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு
அரசுச் செயலாளர்

பெறுநர்

1) ஆணையர்(பொ),
கலைப் பண்பாட்டுத் துறை, சென்னை–28.
2) முதல்வர், அரசு இசைக் கல்லூரி, சென்னை–28. (ஆணையர் வழியாக)
3) சம்பள கணக்கு அலுவலர், சென்னை–9/35.
4) மாநில கணக்கு அலுவலர், சென்னை–9/35.

**நகல்:**

நிதி (கல்வி/வ.செ.பொ–II)த் துறை,
சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பொது)த் துறை,
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசுச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை–9.
தமிழ் வளர்ச்சி அறநிலையம் மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்